மக்களின்! குரல்        Registered as a Newspaper





# உதயன்

விலை
ரூபா
5-00





சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 28 ஞாயிற்றுக்கிழமை (11 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 196

# ஈழப் போரில் வெளிநாட்டுத் துருப்புக்களை பயன்படுத்தும் வாய்ப்பு அறவே கிடையாது

## லண்டனிலிருந்து திரும்பியதும் கொழும்பில் கதிர்காமர் பேட்டி

கொழும்பு, ஜூன் 11

வடக்கு - கிழக்குப் போரில் வெளிநாட்டுத் துருப்புக்களை பயன்படுத்தும் வாய்ப்பு அறவே கிடையாது என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

லண்டனுக்கான தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அவர், நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுத் துருப்புகளை அழைத்ததன் மூலம் கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இன்னும் மாறவில்லை என்றார் அவர்.

''விடுதலைப் புலிகள் இயக்கம் நவீன ஏவுகணைகளையும் இரசாயன ஆயுதங்களையும் பெற்றிருப்பதால், இந்தப் பிரச்சினையில் வெளிநாட்டு நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருவதற்கு இது தருணமா?'' —என்று கேட்கப்பட்டபோதே அமைச்சர் கதிர்காமர் மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் தாக்குதல் சிப்பாய் மரணம்!

கொழும்பு, ஜூன் 11

பலாலி படைத் தளத்தின் முன்னணி பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் —

அதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (ஐ-14)

### மாவனல்ல பஸ் நிலையத்தில்

## தமிழில் உரையாடிய 4 இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜூன் 11

மாவனல்ல பஸ் நிலையத்தில் வைத்து நான்கு தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் அண்மையில் சுவிஸில் இருந்து நாடு திரும்பியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தில் இவர்கள் நால்வரும் தமிழில் உரையாடிக் கொண்டு நின்றதை அவதானித்த சிலர் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ-14)

## மலையகப் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு!

கொழும்பு, ஜூன் 11

மலையகப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பண்டாரவளை, எல்ல, தியத்தலாவ, அப்புத்தளை, கொஸ்லந்த, ஊவா பரணகம வெலிமட பகுதிகளில் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

இந்தப் பகுதிகளில் வர்த்தக நிலையங்களைப் பாதுகாக்க இரவுவேளைகளில் ஆயுதம் ஏந்திய பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் காலி நகரில் நடந்த வன்செயல்களைத் தொடர்ந்தே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஐ-க)

### சீ-டான்ஸருக்கு பதிலாக

## 'ஹபரண'வில் தபால் பொதி அனுப்புவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

குடாநாட்டில் சேகரிக்கப்படும் வெளியூர் தபால்களை ''ஹபரண'' கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச்செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

திருமலைக்கும் - பருத்தித்துறைக்கும் இடையே மா ஏற்றி இறக்கும் வேளையில் தபால் பொதிகள் ''ஹபரண'' கப்பலில் அனுப்பி வைக்கப்படும்.

குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் இதுவரை நாளும் 'சீ - டான்ஸர்' கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

''சீ — டான்ஸர்'' கப்பல் கடலில் மூழ்கியதை அடுத்து தபால்களை எடுத்துச் செல்லும் சேவை தடைப்பட்டுள்ளது.

''ஹபரண'' கப்பலில் தபால் பொதிகளை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு யாழ். பிரதம தபால் அதிபர் யாழ். செயலக அதிகாரிகளைக் கேட்டிருந்தார்.

செயலக அதிகாரிகள் இது குறித்து பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியதை அடுத்துதற்போது அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

## வானொலி லைசென்ஸ் பெற கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வானொலி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த கால எல்லை பொதுமக்களின் நன்மை கருதி மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் அல்லது உப அலுவலகங்களில் அல்லது தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து குடும்ப பதிவு அட்டையுடன் சமூகந்தருவதன் மூலம் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை— வானொலி அனுமதிப் பத்திரங்கள் இல்லாத வானொலிப் பெட்டிகளை பொறுப்பேற்க வேண்டாம் என்று வானொலி திருத்த உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வடமராட்சி கிழக்கில் சுப்பசோனிக் தாக்கு!

### பெண் காயம்

வடமராட்சி, ஜூன் 11

வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ''சுப்ப சோனிக்'' விமானம் ஒன்று குண்டு வீச்சு நடத்தியது.

கடல் பக்கமாகஇருந்து திடீரென வந்த சுப்ப சோனிக் விமானம் அப்பகுதியில் மூன்று குண்டுகளை வீசியது.

குடாரப்பு றோமன் கத்தோலிக்க தொடக்க நிலைப்பள்ளி மைதானப் பகுதியில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

குண்டு வீச்சில் சிக்கி குடாரப்பு வடக்கைச் சேர்ந்த திருமதி பிலிப் மேரி ஆரோக்கியம் (வயது 65) என்பவர் கையில் காயமடைந்தார். அவர் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வீசப்பட்ட மூன்று குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது

இதேவேளை ஆலயபிறவுப் பகுதியிலும் சுப்ப சோனிக் விமானம் குண்டுகளை வீசியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது சேதவிவரங்கள் எதுவும் தெரிய வரவில்லை. (ஐ-173-117-118)

## ஆளும் கட்சியையும், தலைவரையும் புலிகளே இன்று முடிவு செய்கின்றனர்

### நாடாளுமன்றில் அனுரா விசனம்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்க வேண்டும்? எந்தத் தலைவர் உயிரோடு இருக்க வேண்டும்? யார் இறக்க வேண்டும்? என்பதெல்லாம் இன்று கொழும்பிலிருந்து 250 மைல்களுக்கு அப்பாலிருந்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி எம்பியான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட விவாதத்தினை எதிர்க்கட்சி சார்பில் ஆரம்பித்து வைத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 12 வருடங்களாக நாம் புலிகள் பற்றி பேசி வருகின்றோம். பண வளம் நிறைந்த மிகப்பயங்கரமான இயக்கம் புலிப்படை. இன்று வடபகுதியில், தமிழ் மக்களுக்காகப் பேசும் அமைப்பாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விஜய படுகொலை ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்க ஜனாதிபதி தயார்!

### ஆணைக்குழு தலைவருக்கு அவரே கடிதம்

கொழும்பு, ஜூன் 11

தம்மிடம் உள்ள சில தகவல்களை ஆணைக்குழு முன் சமர்ப்பிப்பதற்குத் தாம் விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விஜயகுமாரதுங்க படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஆணைக் குழுவுக்கு கடந்த வியாழனன்று அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கொலை நடைபெற்ற இடத்தில் நின்ற இரு சாட்சிகளில் தானும் ஒருவர் என்றும் —

தம்மிடமுள்ள தகவல் பெறுமதி வாய்ந்ததும், விசாரணைக்கு பெரிதும் உதவக்கூடியது என்றும் ஜனாதிபதி தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஆணைக் குழுவின் தலைவர் நீதியரசர் இராமநாதனுக்கு ஜனாதிபதி தமது கடிதத்தை அனுப்பியுள்ளார். (ஐ)

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பு விதிகள் அமுல்

கொழும்பு, ஜூன் 11

கட்டுநாயக்காவிமான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் புதிய பாதுகாப்பு நடைமுறைகள் அமுலுக்கு வந்துள்ளதாக விமான நிலைய அதிகாரசபைத் தலைவர் வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா தெரிவித்தார்.

அதன்படி வெளிநாடு செல்லும் பயணிகள் ... விமான நிலைய ... மதிக்கப்படுவார்.

குறிப்பிட்ட எடைக்கு அதிகமாக இருக்கும் பொதிகள் திருப்பி அனுப்பப்படும்.

வெளி நாட்டிலிருந்து வருபவர்களை வரவேற்பதற்கு ஒருவரும் உள்ளே அனுமதிக்கப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### கட்டுநாயக்காவில் வெடித்தது

## 'கேக் தட்டு' வடிவத்தில் தயாரிக்கப்பட்ட குண்டு!

கொழும்பு, ஜூன் 11

கட்டுநாயக்கா விமானநிலைய வாகனத் தரிப்பிடத்தில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டு ''கேக் தட்டு'' வடிவில் தயாரிக்கப்பட்டிருந்தது என்று இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வானின் உட்புறத்தில் குண்டு பொருத்தப்பட்டு பிளாஸ்ரிக் ரெக்ஸினாலும், இரும்புப் பைகளினாலும் மறைக்கப்பட்டிருந்தது.

தாமதமாக குண்டுகளை வெடிக்கச் செய்யும் புதிய மின் சுற்றுப் பொறி முறையே இக்குண்டை வெடிக்க வைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் நிபுணத்துவம் இல்லாததாலோ அல்லது கலவரத்துடன் பொருத்தப்பட்டதாலோ இணைப்புகள் முறை தவறி பொருத்தப்பட்டு இருந்தன.

இதனாலேயே பிரதான குண்டு வெடிக்காமல் போய் விட்டது.

மீட்கப்பட்ட குண்டு பாகின் தான் ''பி. ஈ. 3 பிளாஸ்டிக் வெடி மருந்து மூலம் தயாரிக்கப்பட்ட நவீன நுட்பத்தைக் கொண்டது என்றும் இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-14)

## குண்டை வைத்து விட்டு பஜீரோவில் ஏறித்தப்பினர்!

கொழும்பு, ஜூன். 11

கட்டுநாயக்கா விமான நிலைய வாகனத் தரிப்பிடத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது குண்டை வாகனத்துடன் அங்குஎடுத்து வந்த இருஇளைஞர்களும்பின்னர் ''பஜீரோ''வாகனம் ஒன்றில் ஏறித்தப்பிச் சென்றுவிட்டனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் பொலீஸார் இனங் கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையில் கடந்த இரு வருடங்களாக வசித்து வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த சோமசுந்தரம் அரவிந்தன், ஏ. ஜெகநாதன் ஆகியோரே அவர்களாவர்.

வாகனங்களை வாங்கி திருத்தி விற்பனை செய்து வந்த இவர்கள் வெடிகுண்டு வைக்கப்பட்ட வாகனத்தின் கதவை கழற்றி ''டின்கரின்'' செய்து கொண்டிருந்ததை அயலவர்கள் கண்டுள்ளனராம்.

இவர்கள் இருவரில் ஒருவரின் மனைவியையும், மகனையும் பொலீஸார் விசாரணை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபா நாடு கடத்தப்படும் வரை

## ராஜீவ் கொலை வழக்கை ஒத்திவைக்கக் கோரி மனு

### 26 எதிரிகளின் சார்பிலும் தாக்கல்

சென்னை, ஜூன் 11

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நளினி மற்றும் 25 பேர் வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளனர்.

இவ்வழக்கில் தனியாகக் குற்றம் சுமத்தப்படவிருப்பதாக இந்திய அரசால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கும் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகியோர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டு வழக்கு விசாரணைக்குக் கொண்டு வரப்படும் வரை, தமக்கு எதிரான விசாரணைகளை ஒத்திவைக்கும்படியும் —

மேற்படி மூன்று பேருடனும் சேர்ந்து தங்களை விசாரணை செய்யும்படியும் —

26 எதிரிகளும் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

## மேலும் 3 அமைச்சர்களை நியமித்தார் பிரதமர் ராவ்

புதுடில்லி, ஜூன் 11

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று தமது அமைச்சரவையை விரிவுபடுத்தினார்.

முன்னாள் மாநில முதலமைச்சர்களாக விளங்கிய மூன்று முக்கிய அரசியல் புள்ளிகள் புதிதாக அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் முஸ்லிம் ஆவார்.

இந்த ஆண்டில் இந்திய அமைச்சரவையில் செய்யப்பட்ட இரண்டாவது மாற்றம் இதுவாகும்.

முன்னாள் கேரளா மாநில முதலமைச்சரும், பிரதமர் நரசிம்மராவின் நெருங்கிய சகாவுமான ஏ. கே. கருணாகரன் —

முன்னாள் பீகார் மாநில முதலமைச்சரும் நரசிம்மராவின் நெருக்கமான விசுவாசியுமான டாக்டர் ஜெகநாத் மிஸ்ரா —

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த முஸ்லிம் இனத்தவரான ஏ. ஆர். அந்துலே ஆகிய மூவருமே புதிதாக அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களது பதவிப் பிரமாண வைபவம் நேற்று மாலை ஜனாதிபதி மாளிகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பதியாள் துணை

# ★ கோண்டாவில் தில்லையம்பதி ★

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# இரதோற்சவ விழா சிறப்பு மலர்

(11 - 06 - 1995)

# தில்லையம்பதியில் 130 ஆண்டுகளுக்கு முன்

## தோற்றம் பெற்ற கோயில்

எங்கும் நீக்கமற நிறைந் திருக்கும் பரம்பொருள் ஆன் மாக்களை உய்வித்தற் பொருட்டு எழுந்தருளி இருக் கும் இடமே திருக்கோயிலா கும். யாழ் நகரின் வடபால் மூன்றுமைல் தொலைவில் இருக்கும் கோண்டாவில் தில்லையம்பதியில் இற்றைக்கு நூற்றிமுப்பது ஆண்டுகளுக்கு முன் இத்திருக்கோயில் தோற் றம் பெற்றது.

அன்னை பராசக்தி ஆரம் பத்தில் பேச்சியம்மன் பெயரு டன் பின் சிவகாமி ஆகவும் தோற்றம் பெற்று மாமரச் சோலையில் எழுந்தருளி யிருந்து அருள்பாலித்தாள். அக்காலத்தில் வைகாசி விசா கத்தினத்தில் அம்பாளுக்கு பொங்கல் விழா செய்து அடி யார்கள் இஷ்டசித்திகளை பெற்றனர்.

இச் சமயம் இத் திருக்கோயி லில் நித்திய பூசாகாரியங் களை கோண்டாவில் கிழக்கைசேர்ந்த சைவப் பெரி யார் சரவணமுத்து சபாபதி மார்க்கண்டேயர் சிறப்புற செய்து வந்தார்கள். 1959இல் தர்மகர்த்தாவாக இருந்த கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த அமரர் வீரகத்தி தம்பி ஐயாவின் பெருமுயற் சியால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு திருக் கோயிலை பொறுப்பேற்று இருநேர பூசைவழிபாடுகளுக் கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டு இவரே நித்தியபூசை செய்து வந்தார்.

அன்னையின் அருட் பிரவா கத்தினால் திரண் மக்கள் ஒன்றுகூடிச் சிறப்பான திருப் பெருங்கோயிலை அமைப் பதற்காக 1962இல் பாலஸ் தாபனம் செய்யப்பட்டது. யாழ். மாவட்ட நீதிபதி செ. தனபாலசிங்கம் அவர்களி னால் அடிக்கல் நடப் பட்ட திருக்கோயிலில் சிறந்த திருப்பணி வேலைகள் நிறைவாகி 1965 ஆனி மாதம் மஹா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 1966 இல் அம்பாளுக்கு வைகாசி விசாக தினத்தை முன்னிட்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்ச வம் நடைபெற்று வந்தது.

அம்பாளின் திருவருள் பாலிக்க மேலும் ரிஷபம், பலி பீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், வயிரவர், சித்திரத்தேர், திரு மஞ்சக்கிணறு முதலாம் திருப்பணி வேலைகள் நிறை வேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டில் மஹோற்சவம் ஆரம்பமாகியது. மஹோற் சவ காலத்தில் வேட்டைத் திருவிழா அன்று மாலை வேளையில் குதிரை வாகனத் தில் அம்பாள் ஞானவயிரவர் சுவாமி கோயிலுக்குச் சென்று பரிவேட்டையாடுவதும், இரவு சப்பறத்திருவிழாவும், மறு நாள் தேர்த் திருவிழாவும், வைகாசிப் பௌர்ணமியில் தீர்த்த உற்சவமும் நடை பெறும்

ஞானவயிரவப் பெருமான் கோயிலில் நடைபெறும் ஆனி உத்தர சங்காபிஷேக தினத்தில் வயிரவப் பெரு மான் அம்பாள் திருக்கோயி லுக்கு வருவது வழக்கம். 1977 இல் அம்பாள் திரு வூஞ்சல் காப்பு கட்டிபுரத்தில் வல்லுநர் திரு. பெரியசாமி ஆச்சாரியாருக்கு அம்பாளின் விக்கிரக வேலையே கடைசி வேலையாக அமைந்தது. இத்தோடு அவர் இறைவனடி சேர்ந்துள்ளார் என்பது இந்த சற்றாடலுக்கு தில்லையம் பதி எனும் நாமம் சூட்டப் பட்டது.

தினமும் மூன்று கால பூசை வழிபாடு நடைபெறவும் அம் பாளின் அருட்கடாட்சம்



## மாமர நிழல்தனிலே வந்தேயமர்ந்த தாயே! தாமரைப் பாதமலர் தருவாய்துணை நீயே!

சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்பு உடையது.

திருக்கோயில் வாயிலில் தல விருட்சமாக காணப் படும் சிவன் சக்தியின் திரு வுருவத்தை ஞாபகப்படுத்தும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த துவார னாக அம்பாளின் விமானத்தில் உள்ள கலசத் தைக் காணக்கூடியதாக உள் ளது. இவை அற்புதமான ஒன்றாகும்.

அம்பாளின் மூர்த்திகரம் மேலும் பிரவாகிக்க 1982 இல் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் அரச அதிபராய் இருந்த திரு. யோகேந்திரா துரைச்சுவாமி யால் தைப்பூச தினத்தன்று அடிக்கல் நடப்பட்டு திருப் பணி வேலைகள் தொடங்கப் பட்டன.

இந்தியாவில் இருந்து வரு விக்கப்பட்ட சிறந்த சிற்பாசி ரியர்களால் இரட்டை பஞ் சாங்க முறைப்படி கலை அம் சம் பொருந்திய தனித்தான விமானகோபுரம் அமைக்கப் பட்டது.

ஈழத்தாயான சிவகாமி அம் பாள் திருவுருவத்தை நிர் மாணித்த தென்இந்திய சிற்ப குறிப்பிடத்தக்கது

மூர்த்தியான சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வ யானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் நாகதம்பிரான், சந்தானகோபாலர் நிர்த்தன கணபதி, மகேஸ்வரி, வைஷ் ணவி, பிராமகி, துர்க்கை, சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு ஆகம முறைப் படி தனித்தனி கோயில்கள்

### ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் வரலாறு

அமைக்கப்பட்டன. சிவகாமி அம்பாள் சமேதஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு கனகசபையும் அமைக்கப்பட்டு 1989 பங்குனி உத்தர பௌர்ணமி நிறை நாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

காஞ்சிப் பெரியாரின் அருள் ஆசியுடனும் ஈழத்து அருளாளர்களின் நல்லாசி யுடனும் இந்தியாவின் புனித கங்கை தீர்த்தம் இம்மகா கும்பாபிஷேகத்திற்கு பயன் படுத்தப்பட்டது ஒரு சிறப் பம்சமாகும். இந்தநன்னாளில் அம்பாளின் திருக்கோயில் கிடைத்தது. 1990ஆம் ஆண்டு திருக்கோயில் வரு டாந்த சங்காபிஷேகத் தினத் தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதர் இங்கு கொண்டு வரப்பட்டது 1992 பங்குனி உத்தரத்தை முன்னிட்டு பத் துத் தினங்கள் இலட்ச அர்ச் சனை ஆரம்பமாகியது

1993-ம் ஆண்டு கைமாதம் காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதருக்கு பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடை பெற்றது. 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பாளின் கடாட்சத்தினா லும் அடியார்களின் பெருங் காணிக்கையினாலும் அம்பா ளுக்கு பொன்முடியும் திருக் கோரண சூட்டுவிழா கொண் டாடப்பட்டது.

கவிமாமணி ந. வீரமணி ஐயர் அவர்களால் எழுதப் பட்டு தென்னிந்திய பக்திப் பாடகர் கலைமாமணி ரி.எம். சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப் பதிவு நாடா வெளியீட்டு விழா 1994 05 20 வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச் சார்ய சுவாமிகளின் ஆசியு டன் வெளியிடப்பட்டது 10 6 95 அன்று புதிய சப்பறம் வெள்ளோட்ட விழா நடைபெற்றது

சைவசமய புண்ணிய காலங் கள் சுபவேளைகள் அனைத்தி லும் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன எந் நாளும் அம்பாள் புதுப் பொலிவுடன் நல்லாட்சி செய்துவரும் இப்புண்ணிய கலத்தை நாடி வருவோர் நற்கதி அடைவர் என்பது திண்ணம்.

''தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்'

—திருக்கோயில் பரிபாலனசபை.

## ஆசிச் செய்தி

திருக்கோயில் இல்லாத ஊர் திரு இல் ஊரே. அது ஊரல்ல அடவி......... காடே, என்பது தேவாரம் ''கோயி லில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழமொழி. எவ்வூருக்கும் கோயில் இன்றியமையாதது. இதற்குச் சான் றாக ஆலயங்களால் சூழப்பெற்ற கோண்டாவில் என்னும் திருத்தலத்திலே ''தில்லையம்பதி'' என்னும் சிறப்பினைப் பெற்றபதியிலே, அருளே திருமேனியாகக் கொண்டு, அழும் குழவியின் துயர் துடைக்கும் தாயாய் தன்னேரில்லாக் கருணை வடிவாய் விளங்கும் அன்னை அருள்மிகுஸ்ரீ சிவகாமி அம்மன் இன்று சித்திரத் தேர் ஏறி தன் குழந்தைகளுக்கெல் லாம் நல் அருள் வழங்குகின்ற இந்த நல்ல நாளிலே, சிறியே னும் எனது வணக்கத்திற்கும், மதிப்பிற்குமுரிய நல்லைக் குருமணியின் பாதார விந்தங்களை நெஞ்சிலே நிறுத்தி, இத் திருவிழா சிறப்புடன் நடைபெற எல்லா மக்களுக்கும் சுபிட்ச மான வாழ்வு வாழத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்களாம் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

''சிவநெறித் தொண்டன்''
செ, சத்தியமூர்த்தி பி. எஸ்ஸி.
[ஆசிரியர்]
சமாதான நீதிவான்

## பரிபாலன சபை ஆசி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அகிலத்தை காத்திடும் தில்லையம்பதி தேவி சிவகாம சுந்தரி ரதத் தில் ஆரோகணித்து வலம்வந்து சகல மக்களுக்கும் நல்வாழ்வு அளிப்பாராக பிரார்த்திக்கின்றேன்.

மா. இலக்கணகுமார்
தலைவர்
திருக்கோயில் பரிபாலனசபை

## தேர்த் திருவிழா

உலகம் ஒரு தேர். இத் தேரை முதன் முதலாகச் செலுத்தியவர் சிவபெருமான். ஆகாயத்திலே கோட்டை கட்டி மக்களுக்குத் துன்பம் செய்து வாழ்ந்தவர்கள் முப் புரத்து அசுரர்கள். அந்த அசு ரர்களைக் கொல்வதற்காகச் சிவபெருமான்பூமியைத்தேரா கவும், சூரியசந்திரரைச் சில்லு களாகவும் கொண்டு விஷ்ணு வாகிய அம்பையும் ஏந்தியரு ளினார்.

''சிவனுக்கு என்னுடைய உதவி இன்றி இவர்களை அழிக்க முடியவில்லையே'' என்ற எண்ணம் விஷ்ணுவின் உள்ளத்தில் எழுந்தது. இந்த எண்ணத்தை உணர்ந்த சிவ பெருமான் புன்முறுவல் பூத் தருளினார். அதனால் முப் புரங்களும் அழிந்தன.

''அப்பணி செஞ்சடை ஆதி புரத்தன் முப்புரம் செற்ற வன் என்பார்கள் மூடர்கள். முப்புரமாவது மும்மை காரி யம்'' என்பது திருவாசகம்.

தேரோட்ட விழாவிலேயும் இத் தத்துவமே அடங்கியுள் ளது. தேரின் சிற்பங்கள் யாவும் உலகத்தையே சிருஷ் டித்த தன்மைபோல் விளங்கு கின்றன. தேரின் நடுவே எழுந்தருளியிருக்கும் பெரு மான் உலகத்தையே நடத்தி அருளுகின்ற பெருமானாக வீற்றிருக்கின்றார்.

திருக்கோயில் தோறும் நித் திய பூசைகளின் குறைகளை நீக்கி பூரண சான்னியத்தைப் பெறுதற் பொருட்டு வருஷத் தில் ஆலயத்தில் பத்து நாள் பிரம்மோற்சவத்தை நடத்தி வருகின்றார்கள். இவ்வுற்ச வத்தின் மிகச் சிறப்பு வாய்ந் தது இரத உற்சவம், (தேர்த் திருவிழா.) தேர் உற்சவத்தில் இறைவன் பதினான்கு உல கிற்கும் மத்தியத்தில் அமர்ந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகம் செய்யும் நிலையிலும் பாபத்தை சங்கரித்து புண்ணி யத்தை அருளும் நிலையிலும் அமைந்ததே இரதோற்சவ மாகும். இது சங்காரத்தைக் குறிக்கும் உற்சவம்.

இறைவன் சுவர்க்கம், மத் தியம், பாதாளம் இவைகளிற் சென்று வேத சரீரம், பூத சரீரம், பாதனா சரீரத்தை



எடுத்து அவ்விடங்களில் வசித்து இன்ப துன்பங்களை அனுபவித்தல் என்பதை ஆன் மாக்களுக்கு அருளுதல் என் பதைக் காணலாம்.

சிருஷ்டி, திதி, சங்காரம் என்பன ஆன்மா, தனு கரண புவன போகங்களைப் பொருத் துதலையும் அவற்றில் நிற்றலை யும், அதனின்று மாறுதல் அடைதலையும் குறிப்பிடு வேத இரதோற்சவமாகும்.

சிவநெறித் தொண்டன்
செ. சத்தியமூர்த்தி
(பி. எஸ். ஸி. ஆசிரியர்)

மலராக்கம்:
ந.சி ஆனந்தராசா
(செயலாளர், தில்லையம்பதி)

### திருக்கோயிலை நிர்மாணித்த சிற்பாசிரியர்கள்

திரு. பெரியசாமி திருச்சிராபள்ளி, தென் இந்தியா
திரு சேதுபதி இராமநாதபுரம், தென் இந்தியா
திரு சோமசுந்தரம் தாவடி, கோண்டாவில்
திரு. பாஸ்கரன் நீராவியடி, யாழ்ப்பாணம்
திரு. மோதிலால் நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்
திரு. பாலகிருஷ்ணன் மயிலங்காடு, சுன்னாகம்
திரு. ரவீந்திரன் அராலி, வட்டுக்கோட்டை

## மேல் நிலை அருள்வாள் சக்தி!

அன்னை பராசக்தி ஓம் சக்தி ஓம்
ஆதி சிவசக்தி ஓம் சக்தி ஓம்
இம்மை நலம் தந்தாள் ஓம் சக்தி ஓம்
ஈந்தவருக்கு அருள் வாள் ஓம் சக்தி ஓம்
உமையவள் திரிசூலி ஓம் சக்தி ஓம்
ஊழித் தவக்காளி ஓம் சக்தி ஓம்
எம்மையும் ஆட்கொண்டாள் ஓம் சக்தி ஓம்
ஏற்றங்கள் அருள் வாள் ஓம் சக்தி ஓம்
ஐஸ்வரிய பூரணி ஓம் சக்தி ஓம்
ஒருமையில் ஓங்கும் ஓம் சக்தி ஓம்
ஓங்காரி பைரவி ஓம் சக்தி ஓம்
ஔவியம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
ஆனந்தம் சேர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பர்வதக்குமரி ஓம் சக்தி ஓம்
பார்வையில் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
சிவகாமித் தாயே ஓம் சக்தி ஓம்
மேல் நிலை அருள்வாள் ஓம் சக்தி ஓம்




திருத்தேர் ஏறிவரும் அம்மாள் அருள்பெற வேண்டுகின்றோம்

**திருமாட்டி புடைவைக்கடல்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**வீடியோ எக்கோணமி**
303, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**நிசாந்தன் களஞ்சியம்**
திருநெல்வேலிச் சந்தி.
திருநெல்வேலி.

**இலங்கையன் பதிப்பகம்**
ராஜா தியேட்டர் அருகில்,
யாழ்ப்பாணம்.

**செல்லையா சிவபாதலிங்கம்**
வைரக்கல் நகை வியாபாரம்,
19, H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திருத்தேர் ஏறிவரும் அம்மாள் அருள்பெற வேண்டுகின்றோம்

**எஸ்.லிங்கநாதன் வண்ணச் சோலை**
13, 14 மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் குளிர்களி அகம்**
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**ஞானம் ஆடையகம்**
54, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

**ஞானம் விற்பனை கூடம்**
66, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச் சோலை**
57, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

**குகன் களஞ்சியம்**
180, கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விஞ்ஞானிகளே!

சீனியில் நாம் தன்னிறைவடைய குறைந்த செலவில் நிறைந்த பதநீர் தேவை; இதற்கான

# பொறியைக் கண்டுபிடியுங்கள்

## ரூபா 1000000 உங்களுக்காகவே

- குறைந்த நேரத்தில் மரத்தில் ஏறி இறங்க-
- பாரம்பரிய முறையில் தொழில் செய்வோர் விரும்பக் கூடிய-
- குறைந்த மனித வலுவில் இலகு தொழில் நுட்பம் கொண்ட-
- இலகுவாகக் கையாளக் கூடிய-

ஒட்டுமொத்தத்தில் மலிவாக பதநீரை உற்பத்தி செய்யக்கூடிய பொறியை உருவாக்கித் தாருங்கள்



★ 5% பயன்பாடு 60% ஆக உயர வேண்டும்

★ சீனிக்காக வெளியேறும் பணம் மீதப்படும்

★ மாற்று எரிபொருளாய் மது சாரம் கிடைக்கும்

★ வேலை வாய்ப்புக் கூடி வாழ்க்கைத் தரம் உயரும்

★ சமுதாயப் புரட்சிக்கு வழி வகுக்கும்

## 10லட்சம் ரூபாய்

உங்களுக்குத் தரக் காத்திருக்கின்றது

## பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல. 173/10, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (36997)

வளர்ந்த கினிக் கோழிக் குஞ்சுகள், முட்டையிடும் பருவத்தில் வெள்ளை புள்ளி கினிக்கோழி, கில்கி, பிறாமா விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: இல. 28/23, பழம் றோட், மணத்தறை லேன், கந்தர்மடம். (37015)

455 புதிய வீடியோ கமறா, M - 100 வீடியோ கமறா, நிக்கோன் F. M - 2 ஸ்ரீல் கமறா, கனோன் ஸ்ரீல் கமறா, நீலன் வீடியோ, 13/1, கடற்கரை வீதி, ஈச்ச மோட்டை. (8579)

நல்ல இன பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூசி நீக்கியது. S. பாலசுப்பிரமணியம், 58, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (8581)

புதிய சிவிய பனை மரங்கள் பல தரப்பட்ட அளவுகளில் G. I. பைப்புகள் (1½ அங், 3 அங்.) முழு நீளமானவை. மற்றும் ஒற்றைத் திருக்கல் வண்டிக் விற்பனைக்குண்டு. தொடர்பு: சபாநாயகம், இல. 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (37011)

சிறிய இனப் பொமரேனியன் நாய்க்குட்டிகள் ஒன்றரை மாதம் நிறைந்தவை. கருமையானவையும், பிறவுண் நிறமானவையும் விவேகமானவையும், அழகியவையும் விற்பனைக்கு. ஜெகந்நாதன், திருவள்ளுவர் சாலை, கந்தர் மடம். (87010)

பொமரேனியன் நாய்க்குட்டிகள் (ஆண், பெண்) விற்பனைக்குண்டு. Dr. சி. இராசலட்சுமி, குமாரசுவாமி புலவர் வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (8435)

### இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகை உண்டு. (36994)

எடை கூடிய எடை குறைந்த புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தன மாதா கோவில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந் தாழ்வு, யாழ்ப்பாணம். (37032)

### தேவை

றபர் ஸ்ராம்ப், பிளாஸ்ரிக் நேம் போட், ஸ்கூல் பட்ஜ், நம்பர் பிளேட், விளம்பர போட் தயாரிக்கும் எமது ஸ்தாபனத்துக்கு பெண் உதவியாளர் உடன் தேவை. தொடர்பு: "விமா", இல. 372, நாவலர் வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (36996)

மாட்டுக்கொழுப்பு தேவைப்படுகிறது. தொடர்பு — மில்க்வற். (சி/1473)

கடைப் பாவனைக்குரிய ராக்கைகள் கண்ணாடியிலான சோகேஸ் ஆகியவை (Show Case) தேவை. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 799, உதயன் யாழ்ப்பாணம். (37023)

நல்ல நிலையிலுள்ள அவரி மேடைத்தராசு (5, அந்தர்) தேவைப்படுகின்றது. விற்பனை செய்ய விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். சிவா நறுமணப்பூங்கா 288, கேணல்கிட் டு சாலை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/1443)

### மணமக்கள் தேவை

ஜேர்மனியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தொழில் செய்யும் 33 வயது மணமகனுக்கும் அவரது சகோதரி வயது 34 லக்கின நிலை செவ்வாய், பெற்றோர், மணமகனும், மணமகளும் தேடுகின்றார்கள். சைவக் குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: மு. நடராசா மணியகவம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (8580)

### மணமகன்மார் தேவை

குற்றமற்ற 29 வயதுB.Sc.க்கும், 28 வயது சித்த மருத்துவருக்கும், குற்றமுள்ள 25 வயது B.Sc. க்கும், 30, 32 வயது சைவ போசன மணமகளுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (37005)

எட்டில் செவ்வாய் உடைய பெண்ணுக்கு 40 வயதுக்கு உட்பட்ட மணமகன் தேவை. இரண்டாம் தாரம் ஆயினும் பரிசீலிக்கலாம். கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 798, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (37003)

விஞ்ஞான பட்டதாரி வயது 29 புனர்பூசம் மணமகளுக்கு மணமகன் தேவை. சாதகக் குறிப்புகளுடன் தொடர்பு கொள்ளவும். ஆ. கந்தசாமி (ஓய்வுபெற்ற தபாலதிபர்) சங்கானை. (8575)

### மணப்பெண் தேவை

குற்றமற்ற 36 வயது கணக்காளருக்கும், 34 வயது டாக்டருக்கும் சைவ போசன 38 வயது வர்த்தகருக்கும் கனடா போகின்ற 38 வயது மணமகனுக்கும் தேவை மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (37004)

### மணமகன் தேவை

ஏழில் செவ்வாய், சித்திரை நட்சத்திர 33 வயது பட்டதாரி ஆசிரியைக்கு சைவ போசன மணமகன் தேவை. தொடர்பு இல. 49, மே/பா, உதயன் சேவை நிலையம், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (8434)

### வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் சுற்றாடலில் சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு, மு. தங்கரத்தினம் 54, செட்டித்தெரு, நல்லூர். (37021)

### சனி மாற்றம்

பகை வக்கிர வியாழன், பகை யுத்தச் செவ்வாய், சனி ஒன்றுக் கொன்று கெட்ட சதுரப் பார்வைகளால் வடக்கின் பாரிய யுத்தம் அரசுக்குப் படு தோல்வியைக் கொடுக்கும், சத்தியாவின் சனி மாற்றம் ரூ 10/- எங்கும் கிடைக்கும். மது புத்தகசாலை கொக்குவில் சந்தி. (8436)

### தவறிவிட்டது

9-6-95 அன்று சுந்தர லிங்கம் வாசுகியின் குடும்ப அட்டை, உணவு முத்திரை, குலசிங்கத்தின் மண்எண்ணெய் காட் ஆகியன கொக்குவில் றோட்டுக்கும்-திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவுசெய்து மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள தேநீர்க் கடையில் (வேலணை) கையளிக்கவும். சன்மானம் தரப்படும். (37018)

1 - 6 - 95 இரவு கிளாலியில் இருந்து தமிழீழ போக்குவரத்து கழக பஸ்ஸில் வருகையில் பெறுமதியான மணிச் சங்கிலி, ஒரு தொகைப்பணம், உடுப்பு வகைகள். அடையாள அட்டை மற்றும் பொருள்களுடன் நீலநிற "பாக்" தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். க. ரவிச்சந்திரன் (பத்தர்) வாராம்பத்தை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். சன்மானம் வழங்கப்படும். (36901)

### O/L கணிதம் - 95

விசேடமாக Distinction, Credit பெறுபேறுடைய வினா - விடை மூலம் ஆரம்பத்திலிருந்து B. Sc., ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி), திருநெல்வேலி. (37030)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8557)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8558)

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Speial T. V. Antenna, Repaireing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (C-1490)

### கணக்கியல்

உயர்தரக் கணக்கியல் பகுதி II திருத்திய இரண்டாம் பதிப்பு வெளியீடு! புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு ஆக்கம்: வீ. சுந்தரேஸ்வரன் (B. Com MAAT) விற்பனையாகிறது. பூபாலசிங்கம், புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1486)

## ஆண்டு - 5 புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்கான புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு 11 - 6 - 95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(8582)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## புதிய அனுமதிகள் 1994/95 கல்வியாண்டு

1994/95 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டு இதுவரை பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் தங்கள் பதிவினை 1995-6-23 இற்கு முன்பாக மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். இத் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளாவிடின் அத்தகையோரின் பெயர்கள் வெற்றிடங்களாகக் கருதப்பட்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அவர்களுடைய இடங்களை அடுத்த பட்டியல் மூலம் நிரப்பும் வண்ணம் கேட்கப்படும்.

— பதிவாளர்.
(சி-1470)

உ
அம்பாள் துணை
சுதுமலை அருள்மிகு

## ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு

பாடப்பட்ட

## ரசஞான கீர்த்தனை

இராகம்: சண்முகப்பிரியா — தாளம்: ஆதி

பல்லவி

சுதுமலை மாநகர்ச் சுந்தரியே நீயின்று
புதுமை பொலியத் தேர்ப்பவனி கொண்டிடுவாய்
— சுதுமலை மாநகர்

அநுபல்லவி

சர்வமங்கள மாருபிணி சாந்தநாயகி யம்மையே
பர்வதா வர்த்தனிப் பராபரைத்தாயே நீ
— சுதுமலை மாநகர்

சரணம்

பாரினில் தோன்றிய அவலங்கள் மாறவும்
ஊரினில் தோன்றிய நோய்நொடி மாறவும்
போரினில் தோன்றிய துன்பங்கள் மாயவும்
தேரினில் எழுந்தருளிவாய் புவனேஸ்வரித் தேவியே நீ
— சுதுமலை மாநகர்

ஆக்கம்:
ஞானசிரோன்மணி, சைவப்புலவர்மணி
வித்துவான் வ. செல்லையா.

(37029)

## CHUNDIKULI GIRLS' COLLEGE O. G. A. - RE - UNION

**17 - 06 - 1995 (SATURDAY)**

| | |
|---|---|
| 8-30 a. m. | Praise Service & Holy Communion |
| 10-00 a. m. | The Annual General Meeting |
| 12-00 p. m. | Fellowship Lunch - Rs. 75/- (Lunch Tickets are available at the College office please buy them before 15th inst.) |

All old Girls are cordially invited

HONY. SECRETARY.

(C/1461)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்
பேராசிரியர் அ. துரைராசா
அவர்களது

## முதலாவது நினைவஞ்சலிக் கூட்டம்



காலம்:
13 - 06 - 1995
செவ்வாய்க்கிழமை
பி. ப. 2-30 மணி

இடம்:
யாழ். பல்கலைக்கழக
கைலாசபதி
கலையரங்கு

தலைவர்:
பேராசிரியர்
க. குணரத்தினம்
(துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிகழ்ச்சி அமைப்பாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-1458)

ஓம்
கணபதி துணை

## திருமண அறிவித்தல்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவவருடம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் இன்று (11 - 06 - 1995) ஞாயிற்றுக்கிழமை (கலிஸ் நேரப்படி) பகல் 11 - 12 மணிவரையுள்ள விசாக நட்சத்திரமும் துலாலக்னமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எங்கள் புதல்வன் திருநிறை செல்வன் **லவசிலன்** அவர்களுக்கும் | எங்கள் புதல்வி திருநிறை செல்வி **தமயந்தி** அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயப்படுத்தியுள்ளார்கள் திருமணம் சுவிற்சர்லாந்தில் உள்ள சூரிச்மாநகரில் நடைபெறும். இவ்வைபவத்தை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

| | |
|---|---|
| திரு. திருமதி தம்பிராசா, 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | திருமதி சோமசேகரம், இல: 73, விக்சன் வீதி, கொழும்பு — 12. |

(36983)

யாழ். மாவட்ட
அரச ஓய்வூதியர் சங்கம்
பதிவு இல. PN / PRI / 183

## வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: 1995 - 06 - 19 திங்கட்கிழமை காலை 9-30 மணி

இடம்: நாவலர் கலாசார மண்டபம் நாவலர் வீதி, நல்லூர்.

பிரதம விருந்தினர்: திரு. கா. வீரசிங்கம் (கணக்காளர், ஓய்வூதிய திணைக்களம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. சு. சிவபாலன் (பிரதம கணக்காளர் செயலகம் யாழ்ப்பாணம்)
திரு. வே. பொ. பாலசிங்கம் (மாநகரசபை ஆணையாளர்)

கவனிக்கவும்:
பொதுக் கூட்டத்தில் ஓய்வூதியர் மீளாய்வு ஆராய்தலும், மறைந்த முன்னாள் தலைவர் திரு. அ. வி. அ. ஜே. விஜயரத்னம் அவர்களுக்கு அஞ்சலி முதலியனவும் நடைபெறும். அங்கத்தினர்கள் தவறாது சமூகம் தரவும்.

புதிய அங்கத்தினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

| | |
|---|---|
| க. சி. நமசிவாயம், செயலாளர். | ஐ. இ. சண்முகரத்தினம், தலைவர். |

484, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(37013)

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்

## வெள்ளி விழா - தொடர் நிகழ்வுகள்

நாளை - முழுநிலா நாளன்று (12 - 06 - 1995) சேவாச்சிரமத்தில் காலை 9 மணி முதல் திருமுறை விழா நடைபெறும்.

★ பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் எழுதிய "பெரிய புராணம் ஓர் ஆய்வு" என்னும் நூலை சுவாமி சித்ரூபானந்தா அறிமுகம் செய்து உரையாற்றுவார்.

பண்ணிசை: திரு. இரா. சிவஞானசுந்தரம்

**14 - 06 - 1995 புதன்கிழமை**

★ பி. ப. 2-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் சமயச் சொற்பொழிவு

கீதையில் கர்ம யோகம்
சுவாமி சித்ரூபானந்தா

★ தூய அன்னையின் நாமம் வாழ்க. ★

— செயலாளர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா,
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி-1474)

## சபிண்டீகரணக் கிரியை



### திருமதி நடராஜா செல்லம்மா

கடந்த 1995 மே மாதம் 13ஆம் திகதி (யுவவருடம் சித்திரை மாதம் 29 ஆந் திகதி) சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி நடராஜா செல்லம்மா அவர்களின் ஆன்ம ஈடேற்றம் குறித்த சபிண்டீகரணக் கிரியைகள் எதிர்வரும் 1995 ஜூன் மாதம் 11ஆம் திகதி (யுவவருடம் வைகாசி மாதம் 28ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியிலிருந்து நடைபெறும். அக்கிரியைகளிலும் அதன் பின் மதிய போசனத்திலும், பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
திருமதி வீரசிங்கம் யோகசௌந்தரி
(மகள்)
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"பத்மாவாசம்"
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(36993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## இந்துக்களின் கடமை

சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை வெறுமனே இனரீதியானது மட்டுமல்ல. அவர்களது சமய, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அழித்துத் தடைத்துவிடுவதும் ஆகும்.

இலங்கை தர்மத்துவீபம்; சிங்கள - பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது; பௌத்தத்தை வளர்த்துப் பேணி, பாதுகாப்பதற்கென்றே இலங்கை தோன்றியது என்ற கற்பனை வாதத்தை நிலைநிறுத்துவது - அதனை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பது - சிங்கள - பௌத்த பேரின வாதத்தின் இலட்சியம்.

தங்களது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு - அடைவதற்கு — தமிழர் தாயகம் என்ற யதார்த்த நிலை தடையாக இருப்பதாகக் கருதுகிறார்கள் அவர்கள். அதனாலேயே தமிழர் தாயகம் என்று ஒன்று இலங்கையில் இல்லை என்று விதண்டாவாதம் செய்கிறார்கள் - அழுங்குப்பிடியாக நிற்கிறார்கள்.

அவர்களது விதண்டாவாதத்தை நடைமுறைப் படுத்த உதவுவதே போர். போர் என்ற போர்வையில் தமிழர்களை இனப்படுகொலை செய்வது மட்டுமன்றி, வடக்கு - கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களையும் அழித்து வருகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும், நிராயுதபாணிகளான தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுவது மட்டுமன்றி ஆலயங்களும் சேதப்படுத்தப்படுகின்றன; நிர்மூலமாக்கப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கைகளின் போது எவ்வாறு தமிழர்கள் வேண்டுமென்றே கொல்லப்படுகின்றார்களோ, அதுபோலவே இந்த ஆலயங்களும் வேண்டுமென்றே இலக்கு வைத்துத் தாக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்குப் போர் தீவிரமடைந்த கடந்த 12 வருடங்களிலும் தமிழர் தாயகத்தில் ஆகக் குறைந்தது மூவாயிரம் இந்து ஆலயங்களாவது சேதமாக்கப்பட்டிருக்கும் என்பது உத்தேச மதிப்பீடு. இது பௌத்த பேரினவாதத்தின் மதக்குரோத — மதவெறி — நடவடிக்கையே!

அடிப்படை உரிமைகள், வழிபாட்டுச் சுதந்திரம் சமத்துவம் என்ற சொல்லைகள் வெறும் நீர்மேல் எழுத்துக்களே.

இந்த மத மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தை முழு அளவில் மீறும் விதத்தில் ஆலயங்கள் சேதமாக்கப்படுகின்றன; இராணுவத் தங்குமிடங்களாக்கப்படுகின்றன. அருள் மணக்கும் கோயில்கள் அசுசைப்படுத்தப்படுகின்றன; பூசைகள் வழிபாடுகள் தடுக்கப்படுகின்றன. இந்துக்கள் தமது மனங்களில் புனிதமாக இருத்திப் பூசிக்கும் தெய்வங்களை மாசுபடுத்தி அவர்களின் மனங்களை ஊறு செய்கின்றன படைகள்.

இந்த நீண்ட கால நெட்டூரம் இப்போதைக்கு நிற்கும் அறிகுறியே இல்லை. இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தொடரவே போகிறது.

இந்த அக்கிரமம் வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

இந்து சமயப் பேரவை எதிர்வரும் வியாழக்கிழமை நடத்தவுள்ள கண்டனப் பேரணி போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் இங்கே நடப்பவற்றை வெளி உலகுக்குச் சொல்வதற்கு சிறந்த மார்க்கங்களாகும்.

சிங்கள அரசுகளால் தமிழர்கள் அழிக்கப்படுகிறார்கள் என்பது வெளிநாடுகளுக்குத் தெரிவது போல இந்து மதம் அழிக்கப்படும் விவகாரம் பெரிய அளவில் தெரியாது.

எனவே உத்தேச கண்டனப் பேரணியில் இந்து மக்கள் சகலரும் கலந்து கொண்டு தமது மதம் அழிக்கப்படுவதற்கு எதிராக ஒரே அணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும். இந்துக்கள் யாவரும் இதனைத் தமது கடமையாகக் கருதி இப்பேரணியில் கலந்து கொள்வது அவசியம்.

எழுமின்! விழிமின்!

# மக்கள் மனங்களில் வாழும் மாமனிதர் துரைராசா

தமிழர்களது கல்விப் பாரம்பரியத்தில் தனி முத்திரை பதித்த ஓர் உன்னத மனிதன் பேராசிரியர் அழகையா துரைராசா அவர் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு ஆகிவிட்டாலும் அவரின் உன்னத பணிகள் என்றென்றும் அவரை எமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

அவர் யாழ். மண்ணின் வடமராட்சி பிரதேசத்தில் இமையாணன் கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அழகையா தம்பதியினருக்கு புதல்வனாகப் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை புகழ்பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பெற்றார். உயர்தர வகுப்பில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பேராதனை வளாகத்தின் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானார். பல்கலைக்கழகத்தில் 1957 ஆம் ஆண்டில் அதிஉயர் புள்ளிகளைப் பெற்று முதலாம் வகுப்பில் (First Class) சித்தியடைந்தார்.

பேராசிரியர் துரைராசா தமது முதற்பட்டத் தேர்வில் பெற்ற சிறந்த பெறுபேறு காரணமாக உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்கான புலமைப் பரிசில் ஒன்றைப் பெற்றார். அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மண் பொறியியலில் சிறப்பு வாய்ந்த ஆய்வாளரான காலஞ்சென்ற பேராசிரியர் கே. எச். றொஸ்கோவுடன் இணைந்து பணியாற்றினார். மண்ணிலுள்ள தகைப்பு இயல்புகள் பற்றி இவர் மேற்கொண்ட முன்னோடி ஆய்வு மண் பரிசோதனைக்கான எளிய தகைப்புக் கருவியின் புதிய மாதிரியொன்றை அபிவிருத்தி செய்ய வழிவகுத்தது.

### 'துரையின் கருதுகோள்'

இவ்வாய்வின் முடிவுகள் ''துரையின் கருதுகோள்'' என இன்றும் உலகின் பல் கலைக்கழகங்களின் பொறியியல் துறையில் கற்பிக்கப்படுகின்றன. பேராசிரியர் அவர்களது புதிய கோட்பாட்டு நிறுவுதலுக்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 1961ஆம் ஆண்டில் கலாநிதிப்பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

பேராசிரியர் துரைராசா உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் காலத்திற்குக் காலம் இடவரவுப் பேராசிரியராக அழைக்கப்பட்டார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடாதிபதியாக இரண்டு பதவிக் காலங்களை அலங்கரித்தார். அப்போது அவர் பலவின மாணவர்களாலும், விரிவுரையாளர் குழாத்தினராலும் மிகவும் நேசிக்கப்பட்டார். திறமையும், எளிமையும், இனிமையும் கலந்து அவரது பண்பால் சென்ற இடமெலாம் நேசிக்கப்பட்டார்.

### துணைவேந்தராக ஆற்றிய பணிகள்

அவர் 1987இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் புதிதாக நிறுவப்பட்ட பொறியியல் தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றினார்.

1988செப்ரெம்பர் மாதத்தில் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அக்காலம் அமைதிப் படை என்றபோர்வையில் இந்தியப்படைகள் வெறியாட்டம் நிகழ்த்திய காலம்.

எனவே பேராசிரியர் ஏராளமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார். தனது இனிய ஆளுமைத்திறமையில் அவற்றை எல்லாம் வெற்றி கொண்டார்.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செயலிழந்து விடுமோ எனப்பலராலும் அஞ்சப்பட்ட வேளையில் அவர் துணிந்து முடிவெடுத்தார் 1990 நவெம்பரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய கல்வி ஆண்டை பலவித வசதிக்குறைகளுக்கு மத்தியிலும் ஆரம்பித்தார். அத்துடன் கொம்படிப் பாதையால் ஊரடங்குச்சட்டநேரத்திலும் சைக்கிளில் கிளிநொச்சி சென்று 1990 டிசெம்பர் 03 இல் புதிதாக விவசாய பீடத்தை அங்குரார்ப்பணம் செய்தும் வைத்தார். மிகக் குறைந்த வளங்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மிகக்கூடிய வினைத்திறனுடன் இயக்கினார்.

அவரது மேலாண்மைக் காலத்தின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பல தொடக்கி வைக்கப்பட்டன புதிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டது. ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக துணைவேந்தர் நல நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இளைய ஆய்வறிவாளரின் ஆய்வுப் பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆய்வு நிதியமும், பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமதுஆய்வு முடிவினை வெளியிடுவதற்கு உதவுகின்ற வெளியீட்டு நிதியமும் உருவாகக் காரணமாக இருந்தார்

### புதிய கற்கை நெறிகள்

பேராசிரியரின் ஊக்குவிப்புடனும் உதவியுடனும் தொழிலாளர் கற்கை நெறியும், புறநிலைக் கற்கைகள் நெறியும் வெளிவாரிப்பட்டக் கற்கை நெறியும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக்கழகம் குறித்த பிராந்தியத்தின் மக்கள் சமூகத்துடன் இணைந்து இயங்குதல் வேண்டுமென்ற அவரது சிந்தனைக்குச் செயலுருவம் கொடுத்ததாக மேற்

**வே.தபேந்திரன்**

படி நிகழ்வுகள் அமைந்தன.

அவரது காலத்தில் விவசாய பீடம் புதிதாக நிறுவப்பட்டதுடன் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைத் துறையும் தனியொரு கல்வித் துறையாகத் தரமுயர்த்தப் பட்டது.

பேராசிரியர் துரைராசா தமது உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டதன் காரணத்தால் தமது துணைவேந்தர் பதவிக் காலம் முடிவடைய முன்னரே 1994 மார்ச் இறுதியுடன் இடமாற்றம் பெற்றார் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்குச் சென்றார் அவருக்கு யாழ்ப்பாணச் சமூகமளித்த பிரியாவிடை நிகழ்வுகள் இன்றுவரை எந்த ஒருவருக்குமே வழங்கப்படாத அளவில் மாபெரும் கௌரவிப்பாக இருந்தன.

1994 மார்ச் மாத இறுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நிகழ்ந்த பிரியாவிடை நிகழ்வில் அவர் ''எமது பிரதேசமும் மக்களும் மேம்பாடு அடைய வேண்டுமானால் இந்தப் பல்கலைக்கழகத்தில் நிலவள பீடம், கடல்வள பீடம், காட்டுவள பீடம் என 3 பீடங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்பீடங்களது செயற்பாடுகளின் ஊடாக மக்களது வாழ்வியலுடன் இணைந்த வளங்கள் உத்தம பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும். அப்போது இந்த மண்ணும் மக்களும் உன்னத மேம்பாட்டை அடைவார்கள்'' என உரையாற்றினார்.

எவ்வளவு அனுபவ ஞானம் மிக்க சொற்கள் இவை. அவரது தூரநோக்குப் பார்வையை உணர்ந்து இந்தச் சந்ததி செயற்பட வேண்டும்.

பேராசிரியர் துரைராசா மக்களுடன் மக்களாக சைக்கிளில் பிரயாணம் செய்ததும், ஒரு காலத்தில் மரணப் பொறியாகவிருந்த கிளாலி கடல் நீரேரி ஊடாக பயணம் செய்ததும் நாம் கண்ணால் கண்ட நிகழ்வுகள். இதனால் அவர் எமது மண்ணில் ஓர் மாமனிதனாகப் போற்றப்படுகிறார்.

மறைவிற்குப் பின்பும் போற்றப்பட்டு வரும் மாமனிதன் அவர். 1994 ஜூலையில் அகில இலங்கைக்கம்பன் கழகம் தனது 14வது ஆண்டு விழாவில் பேராசிரியர் துரைராசாவுக்கு தேகாந்த நிலையில் மகரயாழ் விருது வழங்கி கௌரவித்தது.

1994 செப்ரெம்பரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொதுப்பட்டமளிப்பு விழாவில் பேராசிரியருக்கு தேகாந்த நிலையில் ''விஞ்ஞான கலாநிதி (Doctor of Science)'' பட்டம் வழங்கிப் போற்றியது. இதே ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகமும் அவருக்கு தேகாந்த நிலையில் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

★

## மனிதம் மெய்யாக்கி வாழ்ந்த பெரியவரே!

நீங்கள் விடை பெற்றும்
நீண்டதோர் ஆண்டா......
நிலவின் குளிர் வதனம்
நெஞ்சை விட்டுப் போனதில்லை

நாங்கள் அறிய
மனிதம் மெய்யாக்கி
வாழ்ந்த பெரியவரே
எங்கள் ''துரை'' வேந்தே, ......

'நல்லவர்க்குக் காலமில்லை'
பெருமூச்சே தொடர்கிறது......

ஆனாலும்
உள் நின்றியக்கும்
உங்களது தரிசனத்தில்
உங்களது கவடுகளில்
எம் இருப்பு

என். சண்முகலிங்கன்

(முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.)

## புலிகளின் குரல் வானொலியில்

ஞாயிறு இரவு
11 — 06 — 1995

- ★ 8-02 — பேராசிரியர் அ. துரைராசா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''மண்ணிற்காகவாழ்ந்த மாமனிதர்''
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — கருணை ரவி எழுதும் ''காணி நிலம் வேண்டும்'' அங்கம் -13

திங்கள் காலை
12 — 06 — 1995

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை
11 — 06 — 1995

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு

## புலமைப் பரிசில் மாணவருக்கு

1994 ஆம் ஆண்டில் நடந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் — ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளாக உள்ள — 2 ஆயிரத்து 500 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பரிசு வழங்கப்பட உள்ளது.

இதற்காக சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதிநாள் எதிர்வரும் 15ஆம் திகதியாகும்.

மேலதிக விவரங்களை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வடமாகாண வங்கி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சாவகச்சேரியில் பௌர்ணமி விழா

சாவகச்சேரி, ஜூலை. 11

தென்மராட்சி இசைஆசிரியர்களின்ஏற்பாட்டில் மாதாந்தம் நடைபெறும் பௌர்ணமி விழாவில், நாளை திங்கட்கிழமைமாலை 3 30 மணிக்கு டிறிபேக் கல்லூரியில் இசை நிகழ்ச்சி இடம்பெறும். இந்த நிகழ்ச்சியில் திருமதி சுந்தரவல்லி ஆனந்தராஜா பாடுவார். (ந)


திருக்குடும்ப சபை

அவதாரத்தின் 175ஆவது ஆண்டு (1820 - 1995)

மூவொரு இறைவனின் விழாவன்று,
மூன்று இனம் பெண்கள் சேர்ந்திட
மேதகு குரவர் பியன்வெனுநோஆய்,
மலர்ந்திடச் செய்த திருக்குடும்பச் சபையினர்
ஆனி 11இல் ஆண்டுகள் 175ஐ
அவனியில் நினைந்திடுவர் ஆனந்தமாக.
பிளவுண்ட உலகினிலே ஒற்றுமை இயலுமென
''ஐக்கியமாம்'' அருங்கொடையை முக்கியமாய்ப்-பேணிடவே
அப்போஸ்தலிக்க, தியான துறவறக் குழுவினர்,
திருமடச் சார்பற்ற நிறுவனச் சோதரிகள்
குடும்பமாய், குருக்களாய் வாழ்ந்துவரும்-துணை
அங்கத்தினர் யாமின்று பரமனைப் போற்றிடுவோம்
எம் சபையின் 175 ஆண்டுகள் பூர்த்தியாகும்
இந் நாளில் எம்முடன் இணைந்து இறைவனுக்கு
நன்றி கூற உங்களை வேண்டுகின்றோம்.

மாகாணத் தலைவி
அருட் சகோதரி சோபியா பஸ்தியாம்பிள்ளை
யாழ். திருக்குடும்ப மாகாண இல்லம்.
யாழ்ப்பாணம்.
(சி/1469)



யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் வளர்ச்சிக்காக
யாழ் பல்கலைக்கழக கலைஞர்கள் இணைந்து வழங்கும்

தீ சுமந்தோர்

[நாடகம்]

நெறியாள்கை – சி. ஜெய்சங்கர்

இடம்:- இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்
காலம்:- 12 . 06 . 95 திங்கள்
நேரம்:- காலை 9.30 மணி

இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி
காலம்:- 12 . 06 . 95 திங்கள்
நேரம்:- மாலை 3.30 மணி

விளம்பர அன்பளிப்பு:-
குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
[எமக்கு வேறு கிளைகள் இல்லை]


## கட்டுநாயக்கா விமான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படமாக்கப்படார்கள்.

நோயாளர்கள், வயோதிபர் ஆகியோரை வெளியே அழைத்து வரும் பணியில் விசேட ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

விமானநிலையத்துக்கு வரும் வாகனங்களையும் கொண்டு வரப்படும் பொதிகளையும் பரிசோதனை செய்வதற்காக நவீன கருவிகள் கொள்வனவு செய்யப்படும்.

இதேவேளை — பொலிஸின் பைகளில் சுற்றிக் கொண்டு செல்லப்படும் வெடி குண்டுகளை ''மெட்டல் டிடக்டர்கள்'' மூலமோ 'எக்ஸ்-றே' கருவிகள் மூலமோ இனங்காண முடியாது.

இதற்கென ஏழு லட்ச ரூபா செலவில் விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட மோப்பம் பிடிக்கும் 7 நாய்களும் குறிப்பிட்ட பணிகளில் பயன்படுத்தப்படுவதில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-14)


மட்டுவில், விளைவேலி
வீரகத்தி-விநாயகர் தேவஸ்தானம்

ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா ஞாயிறு இன்றும், (11 - 6 - 95) தீர்த்தத் திருவிழா திங்கள் நாளையும் நடைபெறவுள்ளது.
அடியார்கள் அனைவரும் வந்தருள் பெறுக.
இரு தினங்களும் அன்னதானம் வழங்கப்படும்.

விநாயகர் திருவருளை இறைஞ்சுகின்றோம்
நடராசா – பல் பொருள் களஞ்சியம்
மட்டுவில்,
மடத்தடி. சாவகச்சேரி.
(சி/ 1476)



மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்நகர்
★ சிறி அமலா ★
நகை மாடம்
ஆதரவில்

புத்தூர் சிறி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம்
நடத்தும்
மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி
(அ), (ஆ), (இ)

இடம் : கழகசவாரி மைதானம் (புத்தூர் கிழக்கு)
காலம் : 11 — 06 — 1995 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 1-30 மணி

உணர்ச்சிமிக்க இப்போட்டியை கண்ணுக்கு விருந்தாக்கிக்கொள்ள அரிய சந்தர்ப்பம்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

★ ஒளிச்சுடர் விட்டு பளிச்சிடும் நகைகளுக்கு
சிறி அமலா

விளம்பர அன்பளிப்பு:
ரவி ஒளிகானம்
(சுப்ப ஸோ வீடியோ)
100 A, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
(சி-477)


## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா வேலுப்பிள்ளை**

யாழ். மாவட்ட முன்னாள் தொலைத்தொடர்பு பொறியியலாளர்)

தோற்றம்: 17 — 02 — 1940 மறைவு: 21 — 05 — 1986

திதி: 11 - 06 - 1995

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டாலும் உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும், மறையவே மறையாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''வேலகம்''
குருக்கட்டு,
சரணவாய் தெற்கு,
சரவெட்டி.

(8583)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

09-06-95 மாலை மருதனார்மடத்திலிருந்து யாழ்சென்ற மினிபஸ்சில் பயணம் செய்த மாணவி ஒருவர் சகபிரயாணி ஒருவரிடம் வைத்திருக்கக் கொடுத்த கறுப்பு நிறப் பிரயாணப்பை திருப்பிப் பெறப்படவில்லை. அப்பையினுள் இருந்த பெறுமதி மிக்கப் பொருள்களுள் பல்கலைக்கழக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை (இல. 736710234V) என்பனவும் அடங்கும். அப்பையினை கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளுமாறு மிகத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி ச. குமாரசுப்பிரமணியம்,
'சத்திய வாசா'
இமையாணன்.
உடுப்பிட்டி.

(37088)

# முழுநிலா கலைவிழா

இடம்;
மருதனார்மடம் திறந்தவெளி அரங்கு
காலம்:
12-06-1995 திங்கள் பி.ப. 5 மணி

தலைவர்: திரு. ஆ. மகாலிங்கம் (பிரதேச செயலகம், உடுவில்)

பிரதம விருந்தினர்: திரு. அ. தற்பரானந்தன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், சுன்னாகம் கோட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. ஆ. கமலநாதன் (அதிபர்)
திரு. வை. இராசையா (சமாதான நீதிவான்)
திரு. ப. ஒப்பிலறிவன் (யாழ். மாவட்ட இணைப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்;
திரு. செ. தெய்வேந்திரம் (தலைவர், ஞானவைரவர் சனசமூக நிலையம்)
திரு. மு. நடராசா (தலைவர், ஐயனார் சனசமூக நிலையம்)

★ வதிவிட வேளாண்மைப் போட்டி - பரிசளிப்பு
★ வரவேற்புரை
திரு. த. நடராசா (தலைவர், கிராம முன்னேற்றச் சங்கம் - கந்தரோடை)
★ சிறப்புரைகள்
★ நன்றியுரை
திரு. ந. திருநாவுக்கரசு (தலைவர், உடுவில் வட்ட உற்பத்திக்குழு)

### கலையரங்கு

★ அபிநயப் பாடல் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா சாலை)
★ கீர்த்தனம் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா சாலை)
★ புதிய ஆக்க இசை (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
★ இசையரங்கம்
சங்கீதகலா வித்தகர் சி. சிவஞானராசா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
வயலின் — பிரமஸ்ரீ வெ. மோகன் சர்மா
மிருதங்கம் — நித்தி மதியழகன்
★ வசந்தன் கோலாட்டம்
வலிவடக்கு இடம்பெயர்ந்த சிறுவர்கள்
★ "தானலயம்" (நாடகம்)
ஐயனார் சனசமூக நிலையம் வழங்கும்
"வெளிக்கிடடி கொழும்பிற்கு"
★ நாடகம்
கலைநகர் நேருஜி கலாமன்றத்தினரின் 150ஆவது தயாரிப்பும் 20ஆவது மேடை ஏற்றமுமான
"சேரன் செங்குட்டுவன்"
(சரித்திர நாடகம்)
இயக்குநர் நடிகமணி மூ. புஷ்பராசா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலிதெற்கு பிரதேச செயலரும், கந்தரோடை சுன்னாகம் மேற்கு கிராம அலுவலர்களும் பொதுமக்களும்.

கலைவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்:
**சிவா படப்பிடிப்புக் கலையகம்**
**K. B. S. Photo**
பிரதான வீதி, சுன்னாகம்.
[சி-1446]

## எங்கும் விற்பனையாகின்றது



வீழாத படையாகத் தமிழன் அணிதிரண்டு, ஓயாத புயலாகப் பகைவைச் சுழன்றடித்து, சாயாத மலையாக நிமிரும் வரலாற்று அதிசயத்தைக் கண்முன்னால் நிகழ்த்திய பெருந்தலைவனின் கருத்துக்குவியல்...

# தலைவரின் சிந்தனைகள்

அழகிய கையடக்கமான வண்ணப்பதிப்பு
அன்பளிப்பு:- 100/-

இது
தமிழீழ விடுதலைப்புலிகள்
வெளியீட்டுப் பிரிவின் வெளியீடு
(சி/1475)

## பதவி வெற்றிடம்

### திட்ட அலுவலர்

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாகிய எமது திட்டப்பிரிவுடன் இணைந்து செயற்பட மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்: புனர்வாழ்வு/ அபிவிருத்தி/ சமூகசேமம் பாடு போன்ற துறைகளில் திட்டமிடல், கண்காணிப்புப் போன்ற வேலைகளில் குறிப்பிடத்தக்க அனுபவமும், அதனுடன் இணைந்த கல்வித்தகைமைகளும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

வயது: 25-45 வரை [போதிய முன்னனுபவம் உள்ளவர்களது வயதுக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்]

வேதனம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


சகல விவரங்களுடன் விண்ணப்பதாரிகள் 19-06-95 திங்கட்கிழமைக்கு முன்பாக கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.

### சாரதிகள் தேவை

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் தொண்டர் நிறுவனம் ஒன்றிற்கு உழவு இயந்திர சாரதிகள்தேவை. ஐந்து (05) வருட முன்னனுபவம் உள்ள 30-45 வயதுக்குட்பட்டோர் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாக இணைப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை சாலை,
கொக்குவில்.



(37035)

## இளைஞனின் சடலம்

திருநெல்வேலிக்கும், கந்தர்மடத்திற்கும் இடையில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற லொறி, சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சில மணி நேரத்தில் அங்கு மரணமானார்.

சுமார் 34 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [ஐ-15]

### குண்டை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
செய்துவருகின்றனர்.

குண்டை வெடிக்க வைத்த பின் இருவரும் தப்பிச்சென்ற "பஜிரோ" வாகனத்தில் இருந்த வேறு இருவரையும், அவ்வாறு தப்பிச் செல்ல உதவி புரிந்த விமான நிலைய தமிழ் அதிகாரி ஒருவரையும் தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர். [ஐ-14]

### ஆளும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப்புலிகள் இயக்கமே திகழ்கின்றது, அவர்களை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

கடந்த 18 வருட கால நாடாளு மன்ற உறுப்பினர் பதவியில், நடந்து முடிந்துள்ள பல்வேறு நிகழ்வுகளை காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

விடுதலைப் புலிகளை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது என்று கூறிய இராணுவத்தளபதியேஇன்றுமூன்றாம் ஈழ யுத்தத்துக்கு தலைமை தாங்கி நடத்துகிறார்.

இன்று நாட்டின் ஒவ்வொரு தலைவரும் ஜனாதிபதி உட்பட, கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். ஐ. தே. க. வின் தலைமைத்துவத்தை இல்லாது செய்வதில் புலிகள் ஓரளவு வெற்றி கண்டுள்ளனர். தற்போதைய அரசிலும் அவ்வாறு செய்வது அவர்களுக்கு கடினமானது அல்ல — என்றார். [உ-14]

### ஈழப் போரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கண்ட பதிலைக் கூறினார்.

இந்த அச்சுறுத்தலை எதிர்ப்பதற்கான பொதுவான கருத்து ஒற்றுமை காணப்படுகின்றது. இந்த விடயத்தில் இலங்கையோடு இந்தியா ஒத்துழைத்து வருகின்றது. ஆனால் வெளிநாட்டு துருப்புகளை பயன்படுத்தும் வாய்ப்பு இப்போது இடையாது— என்றும் கதிர்காமர் சொன்னார்.

தற்போது நடைபெறும் யுத்தம், சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு ஒரு யுத்தமாக பயன்படக்கூடும் என தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். [உ-4]

### மேலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் நடைபெற்றது.

புதிதாக அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்த மூவருக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள் இன்னமும் ஒதுக்கப்படவில்லை.

ஏற்கனவே பதவியில் உள்ள அமைச்சர்கள் எவராவது வெளியேற்றப்படுவார்களா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் பிரதமர் நரசிம்மராவ் தமது அமைச்சரவை மேலும் மாற்றங்களைச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஐ-4]

### குத்தகை ஒப்பந்த வேலை

பொருளாதாரத் தடையினால் பாதிப்படைந்திருக்கும் கைத்தொழில் நிறுவனம் தையல் இயந்திரங்களுடனும், இட வசதியுடனும் குத்தகைக்கு விடப்படும். அல்லது ஒப்பந்த அடிப்படையில் தையல் வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விவரங்களுக்கு:
ராம்சன்ஸ், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
அல்லது வசந்தி மின்பொருள்கள் விற்பனை நிலையம், பழைய பொலீஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.
[சி-1445]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## தேசத்தின் சேமத்தை முன்னிட்டு...
## பரிசுத்த ஐக்கிய உபவாச ஜெபம்

"ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்ணுகிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக".

இடம்:- பரி. யோவான் கல்லூரி, சுண்டுக்குளி
காலம்:- நாளை [12-6-95] மு.ப 8-30 பி.ப 4-00

"தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்" (யோவேல். 2/ 16, 21)

சகல கிறிஸ்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலைக் கிறிஸ்தவ ஐக்கியம்
17, சுவாட்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(37014)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரம்மா சபாரத்தினப்பத்தர்

சாவகச்சேரி, சங்கத்தானை பொற்றொழிலாளர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சபாரத்தினப்பத்தர் சுந்தரம்மா நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் செல்லையா சபாரத்தினப்பத்தர் அவர்களின் அன்பு மனைவியும், தங்கராசா, நடராசா [ராஜன் நகை மாடம்], சண்முகராசா [லதா நகை மாடம்], நவரத்தினம், தயாபரன் [ஜேர்மனி], கணேசமூர்த்தி [பிரான்ஸ்], கோகிலராணி, அற்புதராணி, மகாலிங்கம், தேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ருக்மணிதேவி, தனலெச்சுமி, இந்திராணி, சந்திரஜெயந்தி, றஞ்சனா, ஜஸ்மின், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், கந்தசாமி மற்றும் அம்பிகா, இராசதுரை ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [11-06-95] பி. ப. 4.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பொற்றொழிலாளர் வீதி சங்கத்தானை — சாவகச்சேரியில் இருந்து கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், வாடிக்கையாளர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. நவரத்தினம் [மகன்]

சபாரத்தினம் நகை மாடம்,
சாவகச்சேரி.
[37038]

## சண்முகம் மகேந்திரன்

புங்குடுதீவு 2 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வவுனியா ஸ்ரேசன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் மகேந்திரன் 5-6-95 ல் வவுனியாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சண்முகம் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மலதா, பத்மப்பிரியா, துசிதா, ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சோமசுந்தரம் (பிரான்ஸ்) கணபதிப்பிள்ளை (கணபதிப்பிள்ளை களஞ்சியம் -மார்க்கட் யாழ்ப்பாணம்), இராசலிங்கம் (சுவிஸ்), யோகலிங்கம் (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன என்பதை ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
ச.கணபதிப்பிள்ளை (தமையன்)

இல. 26, விதானையார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
[37028]

## வைத்திலிங்கம் சிவகுரு

தீவகம் தம்பாட்டியைச் சேர்ந்தவரும் தற்சமயம், வண்ணார்பண்ணை பெரிய தம்பிரான் கோவிலடியில் வசித்து வந்தவருமாகிய வைத்திலிங்கம் சிவகுரு அவர்கள் நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி தங்கம் அவர்களின் அன்புக் கணவரும், விமலாதேவி, சுந்தரலிங்கம், சிவபாக்கியம், இராசம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரெத்தினம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், நடராசா, பாலையா, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வண்ணார்பண்ணையில் அவரது புதல்வனின் இல்லத்தில் இன்று பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றேன்.

தகவல்
சி. சுந்தரலிங்கம் [மகன்]

பெரியதம்பிரான் கோவிலடி,
வண்- மேற்கு,
யாழ்ப்பாணம்.
[37040]

## A. V. ஸ்ரனிஸ்லோஸ் J. P
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அலோசியஸ் விக்டர் ஸ்ரனிஸ்லோஸ் நேற்று சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற றெஜினாவின் அன்புக்கணவரும், செல்வராசா (அச்சுவேலி), யோகராசா (அச்சுவேலி), சூரியகுமார் (கனடா), நிலானி (U K) ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (12-06-95) நாளை காலை 10.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
F. L ஜெகநேசன் (பேறாமகன்)

65A, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(37041)

# முகவரி மாற்றம்

**V.S.B. GROUP**

எமது நிறுவனம் பின்வரும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**வி.எஸ்.பி. குறூப்**
275, 277, அர்ச்சுனா சாலை,
(ஸ்ரான்லி வீதி)
(முன்பு இயங்கிய இடத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-1458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org